# 5

# நிலையான வாழ்க்கைக்குத் தயாராகுவோம்

‘‘உஸ்மான் வ அவர்கள் புதைக்குழிக்கு (கப்ருக்கு) அருகே சென்றால் தமது தாடி நனையுமளவு அழுவார்கள். ‘நீங்கள் சுவர்க்கத்தையும் நரகத்தையும் ஞாபகப்படுத்தும் போது அழுவதில்லை. ஆனால், புதைகுழியை நினைக்கும்போது அழுகிறீர்கள். இதற்குக் காரணம் என்ன? என அவர்களிடம் வினவப்பட்ட போது ‘நபி ஸ அவர்கள் புதைகுழி மறுமையின் முதலாவது கட்டம். அதிலிருந்து யாராவது தப்பிக் கொண்டால் அதற்குப் பின் உள்ளவை அவருக்கு அதைவிட மிக இலகுவானதாக இருக்கும். அதிலிருந்து யாராவது தப்பவில்லையாயின் அதற்குப் பின்னால் உள்ளவை அவருக்கு அதனை விடக் கஷ்டமானதாக இருக்கும்’ எனக் கூற நான் செவியுற்றுள்ளேன் எனப் பதிலளித்தார்கள்.’’ (திர்மிதி)

இறுதிநாளை விசுவாசிப்பது ஈமானின் மிக முக்கிய ஓர் அங்கமாகும். ஈமான் கொள்ள வேண்டிய அடிப்படையான ஆறு அம்சங்களுள் ஐந்தாம் இடத்தை இது வகிக்கின்றது. இந்த நம்பிக்கை உள்ளவர்கள் நன்மைகளை விரும்புகின்றார்கள், அவற்றிலே போட்டியிடுகின்றார்கள். அவற்றுக்காகவே வாழ முயல்கின்றார்கள். இந்நம்பிக்கை இல்லாதவர்கள் தீமைகளுக்கு அடிமையாகின்றார்கள். வாழ்க்கையை அசிங்கப்படுத்திக் கொள்கின்றார்கள். வாழ்க்கையை அழகுபடுத்துவதில் மறுமை நம்பிக்கைக்குத் தனிமையான ஓர் இடமுண்டு. இந்நம்பிக்கை இல்லாத போது வாழ்க்கை தாழ்ந்ததாக அமைந்து விடும். எனவேதான் இஸ்லாம் மறுமை நம்பிக்கையை மிக அதிகமாக வலியுறுத்தியுள்ளது.

இவ்வுலகம் தொடர்ந்து இப்படியே இருக்கப்போவதில்லை. அது ஒரு குறிப்பிட்ட நாளில் பாரிய மாற்றங்களுக்கு உள்ளாகும். அந்நாளில் வானம் பிளக்கும்; பூமி சமதரையாக்கப்படும், மலைகள் தவிடுபொடியாகும், கடல்கள் தீப்பற்றி எரியும். இவ்வாறு முழுப் பிரபஞ்சமுமே பிரமாண்டமான ஓர் அழிவைச் சந்திக்கும்.

‘‘(பலமாக) ஒருமுறை ஸூர் (எக்காளம்) ஊதப்பட்டு, பூமியும், மலைகளும் தூக்கி (எறியப்பட்டு) ஒன்றோடொன்று மோதிப் பலமாக அடிபட்டால், அந்நாளில் தான் (யுக முடிவின்) மாபெரும் சம்பவம் நிகழும். அந்நாளில் வானம் பிளந்து, அது அடியோடு தன் சக்தியை இழந்துவிடும்.’’ (69: 13-16)

இவ்வாறு இவ்வுலகம் அழிக்கப்பட்டு மறுமை வாழ்வு ஆரம்பிக்கப்படும் நாளே ‘இறுதி நாள்’ (அல்யவ்முல் ஆகிர்) என அழைக்கப்படுகின்றது. அந்நாளில் இடம்பெறும் நிகழ்வுகளைச் சுருக்கமாக நோக்குவோம்.

## 1. ப..ஸ் :

இரண்டாவது ஸூர் ஊதப்பட்டதைத் தொடர்ந்து அனைவரும் உயிர்பெற்று எழும்பி வருவர். அவ்வேளை மறுமையை விசுவாசிக்காதவர்கள் ‘எங்களுடைய துக்கமே’ எங்களுடைய தூங்குமிடங்களிலிருந்து எங்களை எழுப்பியவர் யார்? எனக்கேட்பர். விசுவாசிகளோ ‘‘அருளாளன் வாக்களித்ததும் தூதர்கள் உண்மையெனக் கூறியதும் இதுதான்’’ (36:52) எனக் கூறுவர். இவ்வாறு அனைவரும் உயிர்கொடுத்து எழுப்பப்படுதலே ‘‘ப.்.ஸ்’’ எனப்படுகிறது.


## 2. ஹஷ்ர் :

புதைகுழிகளிலிருந்து உயிர்பெற்று எழுவோர் விசாரணைக்காக ஓரிடத்தில் ஒன்று கூட்டப்படுவர். இவ்வாறு ஒன்று திரட்டப்படுவதையே ‘‘ஹஷ்ர்’’ என்பது குறிக்கும். ஒன்று கூட்டப்படும் இடம் ‘‘மஹ்ஷர்’’ எனப்படும்.

மனிதர்கள் உலகில் வாழ்ந்த முறைக்கேற்ப அங்கு அவர்கள் எதிர்கொள்ளும் நிலைமை அமைந்திருக்கும். நல்ல மனிதர்கள் நிழலில் இருப்பர். பாவிகளது நிலையோ பரிதாபமானதாக அமைந்திருக்கும்.

மறுமை நாளில் சூரியன் சிருஷ்டிகளுக்குச் சமீபமாக்கப்பட்டிருக்கும். அதற்கும் அவர்களுக்கும் இடையே மிகவும் சிறிய அளவு தூரமே இருக்கும். மனிதர்கள் தங்களது செயல்களின் அளவிற்கேற்ப வியர்வையில் மூழ்கியிருப்பர். சிலர் கரண்டைக் கால்வரை வியர்வையில் மூழ்கியிருப்பர், இன்னும் சிலர் முழங்கால்கள் வரை வியர்வையில் மூழ்கியிருப்பர், இன்னும் சிலர் இடுப்பு வரை வியர்வையில் மூழ்கியிருப்பர். இன்னும் சிலருக்கு வியர்வை கடிவாளமிட்டிருக்கும் என்று கூறிய நபி ச அவர்கள் தமது கரத்தினால் வாயைச் சுட்டிக்காட்டினார்கள். (முஸ்லிம்)

மஹ்ஷரில் இவ்வாறு கஷ்டப்படும் மக்கள், இந்நிலமைக்கு ஒரு முடிவு காண விரும்புவர். இவர்கள் முறையே




ஆகிய நபிமார்களிடம் சென்று, விசாரணையை ஆரம்பிக்குமாறு அல்லாஹ்விடம் மன்றாடும் படி அவர்களை வேண்டுவர். ஆனால் அவர்களில் எவரும் முன்வர மாட்டார்கள். ஒவ்வொருவரும் அடுத்தவரிடம் செல்லுமாறு கூறுவர். மக்கள் இறுதியாக முஹம்மது ஸ அவர்களிடத்தே வந்து அதே வேண்டுகோளை முன்வைப்பர். அதனை ஏற்றுக் கொள்ளும் அவர்கள் ஸுஜூதில் விழுந்து அல்லாஹ்விடத்திலே மன்றாடுவார்கள். இதனை 'அஷ்ஷபாஅதுல் குப்ரா (பெரிய மன்றாட்டம்) என்பர். இம்மன்றாட்டத்தை அல்லாஹ் ஏற்று, விசாரணையை ஆரம்பிப்பான்.

## 3. ஹிஸாப்:

மஹ்ஷரிலிருந்து திரும்ப முன்னர் அல்லாஹ் தனது அடியார்களை விசாரிப்பான். இவ்விசாரணையே 'ஹிஸாப்' எனப்படுகிறது.

விசாரணையின் அமைப்பு எவ்வாறு இருக்கும்? என்பதை நாம் அறியோம். ஏனெனில் அது ஒரு மறைவான விடயமாகும். ஆனால் இவ்வுலகில் மனிதர்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஏற்ப விசாரணை வித்தியாசப்பட்டு அமையும் என்பதை அல்குர்ஆனும் ஸுன்னாவும் உறுதிப்படுத்துகின்றன.

விசாரணையின் போது செயல்களின் பதிவேடுகள் (ஸஹாஇபுல் அ.்.மால்) வழங்கப்படும். வலக்கரத்தில் பதிவேடு வழங்கப்படுபவர், அடைகின்ற சந்தோஷத்தை மட்டிட முடியாது. அது உண்மையான வெற்றியினால் ஏற்பட்ட சந்தோஷமாகும். அவர் ''...... இதோ என் பட்டோலையைப் படியுங்கள் எனக் கூறுவார். நிச்சயமாக நான் என்னுடைய கேள்வி கணக்கை சந்திப்பேன் என நம்பியிருந்தேன் (என்றும் கூறுவார்) (69:19-20)

இடக்கரத்தில் பட்டோலையைப் பெற்றவர் கைசேதப்படுவார். நிரந்தர வாழ்வில் தோல்வியை சந்திக்கும் அம்மனிதனை விடப் பெரிய துர்ப்பாக்கியசாலி வேறு யாரும் இல்லை. எனவே அம்மனிதர்,

''என்னுடைய பட்டோலை எனக்குக் கொடுக்கப்படாமல் இருந்திருக்க வேண்டுமே அன்றியும் என் கேள்வி கணக்கு என்ன என்பதை நான் அறிய வில்லையே. நான் இறந்த போதே இது முற்றிலும் முடிந்திருக்கக் கூடாதா? என் செல்வம் எனக்குப் பயன்படவில்லையே, என் செல்வாக்கும் அதிகாரமும் என்னை விட்டு அழிந்து விட்டனவே (என்று கூறுவான்). (69:25-29)

**விசாரணையைப் பொறுத்த வரை நாம் மறக்கக்கூடாத பல விடயங்கள் காணப்படுகின்றன. அவையாவன**

அ) அணுவளவு நன்மையும் வீணாவதில்லை. அணுவளவு தீமைக்குக் கூட விளைவு இல்லாமல் இல்லை.

''எவர் ஒருவர் அணுவளவு நன்மை செய்தாலும் அதனை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவர் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும் அதனையும் அவர் கண்டுகொள்வார்.'' (99:7-8)

**எனவே, சிறிய நன்மை என்று கூறி புறக்கணிக்காதிருப்போம். சிறிய தீமையாக இருந்தாலும் விலகியிருப்போம்.**

ஆ) மனிதனது உடல் உறுப்புக்கள் தாம் செய்த தீமைகள் பற்றிச் சாட்சியம் சொல்லப் பின் நிற்பதில்லை.

''அந்நாளில் அவர்களுடைய நாவுகளும் அவர்களுடைய கைகளும், அவர்களுடைய கால்களும் அவர்களுக்கெதிராக அவர்கள் செய்தவை பற்றிச் சாட்சியம் கூறும்.'' (24:24)

**ஆகவே, எமது உடல் உறுப்புக்களை தீமைகளுக்குப் பயன்படுத்தாதிருப் போம். அவற்றை எமக்கெதிரான சாட்சிகளாக ஆக்காதிருப்போம்.**

இ) பட்டோலைகளில் எதுவுமே பதியாது விடப்படுவதில்லை.

''எங்களுடைய கேடே! இதென்ன புத்தகம்! சிறிதோ பெரிதோ ஒன்றையும் விடாது இதில் பதியப்பட்டுள்ளதே! என்று அவர்கள் கூறுவதை நீர் காண்பீர். அவர்கள் செய்த யாவும் அதில் இருக்கக் காண்பார்கள். உமதிறைவன், எவனுக்கும் அநியாயம் செய்ய மாட்டான்.'' (18:49)

**எனவே, எமது பட்டோலைகளை நற்கருமங்களால் நிரப்ப முயன்றிடு வோம். உண்மையான வெற்றிக்கு அதுவே வழி என்பதை மறவாதி ருப்போம்.**

## 4) மீஸான்:

மறுமையில் அமல்களின் எடையைக் கணிப்பதற்குத் 'தராசு' இருப்பதாக அல்குர்ஆனும் ஹதீஸும் குறிப்பிடுகின்றன. அத்தராசையே 'மீஸான்' என்போம். அத்தராசு அணுவளவு நன்மையைக் கூட, அணுவளவு தீமையைக் கூட காட்டக் கூடியதாக இருக்கும்.

''கியாம நாளில் மிகத் துல்லியமான தராசையே நாம் வைப்போம். எனவே எந்த ஓர் ஆத்மாவுக்கும் ஒரு சிறிதும் அநியாயம் செய்யப்பட மாட்டாது. மேலும் (நன்மை, தீமையில்) ஒரு கடுகளவு எடையிருப்பினும் அதனையும் நாம் கொண்டு வருவோம்.'' (21 : 47)

எனவே அன்றாட வாழ்வில் நமது மீஸானை நன்மைகளால் கனதியாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோம். வகுப்பறையில் சக மாணவர்களுடனும் ஆசான்களுடனும் நடந்து கொள்ளும் முறை கூட நன்மைத் தட்டை அல்லது தீமைத் தட்டைக் கனதியாக்கும் என்பதை ஞாபகத்தில் கொள்வோம்.

## 5. ஹவ்ழ்:

நபி ﷺ அவர்களுக்கு மறுமையில் அல்லாஹ்வால் வழங்கப்படும் விசேடமான தடாகமே 'ஹவ்ழ்' எனப்படுகிறது. நபி (ஸல்) அவர்கள் தமது தடாகத்தைப் பற்றிக் கூறுவதை அவதானிப்போம்.

''எனது தடாகம் ஒருமாத காலம் பயணம் செய்யுமளவு பாரியது. அதனது நீர் பாலை விட வெண்மையானது. அதனது நறுமணம் கஸ்தூரியை விடச் சிறந்தது. அதனது கிண்ணங்கள் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போன்றவை. அதிலிருந்து யார் பருகுகின்றாரோ அவருக்கு ஒருபோதும் தாகம் ஏற்பட மாட்டாது.'' (புகாரி)

ஒவ்வொரு நபிக்கும் ஒரு தடாகம் இருக்கும். எல்லா நபிமார்களின் தடாகங்களையும் விட முஹம்மத் ﷺ அவர்களது தடாகம் தான் பெரியதாகவும், சிறந்ததாகவும், பெருந்தொகையானோர் வரக் கூடியதாகவும் இருக்கும் என்ற கருத்து சில ஆதாரபூர்வமான ஹதீஸ்களில் காணப்படுகின்றது.

நபி ﷺ அவர்களை முழுமையாகப் பின்பற்றுவதே மறுமையில் அவர்களது தடாகத்தில் நீரருந்தும் பாக்கியத்தைப் பெற வழி என்பதை என்றும் நினைவில் கொள்வோம்.

## 6. ஸிராத்:

விசாரணை முடிவுற்றதன் பின்னர் ஒவ்வொருவரும் தத்தமக்குக் கிடைக்கும் இருப்பிடத்தை நோக்கிச் செல்ல வேண்டியிருக்கும். அவ்வாறு செல்லும் போது அவர்கள் நரகத்தின் மீதுள்ள பாலத்தைத் தாண்ட வேண்டியிருக்கும். அப்பாலமே ''ஸிராத்'' எனப்படுகிறது.

அப்பாலத்தைத் தாண்டக்கூடிய வாய்ப்பு சுவனவாசிகளுக்கு மட்டுமே கிடைக்கும்.

''நரகின் மீது பாலமிடப்படும். நானும் எனது சமூகத்தினருமே அதனை முதலில் கடப்பவர்களாக இருப்போம். அந்நாளில் இறைத்தூதர்களைத் தவிர வேறு யாரும் பேச மாட்டார்கள். அவ்விறைத்தூதர்களது பிரார்த்தனை, இறைவா! காப்பாற்று, காப்பாற்று! என்பதாகவே அமைந்திருக்கும்.'' (புகாரி)

மக்கள் ஸிராத்தைக் கடக்கும் போது இவ்வாறு இறைத்தூதர்கள் பிரார்த்திப்பதானது அது எவ்வளவு தூரம் பயங்கரமானதாக இருக்கும் என்பதற்குச் சான்றாக அமைகிறது.

விசுவாசிகள் தாம் செய்த நற்செயல்களின் கனதிக்கேற்ப இதனைக் கடந்து செல்வர். சிலர் மின்னல் வேகத்தில் அதனைக் கடப்பர். வேறு சிலர் காற்று வேகத்தில் அதனைக் கடப்பர். உயர்ந்த ரகக் குதிரையின் வேகத்தில் அதனைக் கடப்பவர்களும் இருப்பர். சிலர் தவழ்ந்து தவழ்ந்து அதனைக் கடப்பர். இப்படியாகப் பாலத்தைக் கடக்க எடுக்கும் நேரத்தில் வித்தியாசம் காணப்படும்.

ஸிராத்தைக் கடப்பவர்கள் சுவனத்தை அடைவர். அதனைக் கடக்க முடியாதவர்கள் நரகை அடைவர். இதனை விடப் பெரிய இழிவு வேறெதுவும் கிடையாது.

''மேலும் அதனைக் கடக்காமல் உங்களில் யாரும் போக முடியாது. இது உம்முடைய இறைவனின் முடிவான தீர்மானமாகும். பின்னர் பயபக்தியுடன் இருந்தார்களே, அவர்களை நாம் ஈடேற்றுவோம். ஆனால் அநியாயம் செய்தவர்களை அதில் (நரகில்) விட்டு விடுவோம்' (19:71-72)

நரகம் அதி பயங்கரமான இடம் என்பதனையும் சுவனத்தை விடச் சிறந்த ஓரிடம் கிடையாது என்பதனையும் முன்னைய வகுப்புக்களில் நீங்கள் படித்திருக் கிறீர்கள். எனவே மறுமை நாள் நிகழ்வுகளை உரியமுறையில் எதிர்கொண்டு சுவனத்தை அடைவதற்கு ஏற்ற வகையில் வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

**பயிற்சி**

1. பொருத்துக

| | |
|---|---|
| i) அல்யவ்முல் ஆகிர் | அ) விசாரணை |
| ii) ஹிஸாப் | ஆ) தடாகம் |
| iii) மீஸான் | இ) பாலம் |
| iv) ஸிராத் | ஈ) தராசு |
| v) ஹவ்ழ் | உ) இறுதிநாள் |

2. மறுமை நாளை நம்புவதால் ஏற்படக்கூடிய பயன்களுள் இரண்டைத் தருக.
3. ப.்.ஸ் என்றால் என்ன?
4. மஹ்ஷரில் நிழல் பெற்றுத் தரும் ஒரு நற்செயலை எழுதுக.
5. மறுமையில் விசாரணைகளின் போது முன்வைக்கப்படும் சாட்சியங்களுள் எவையேனும் இரண்டைத் தருக.